29.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீலகிரியில் இரண்டாவது சீசன் விரைவில் தொடக்கம்

நீலகிரியில் இரண்டாவது சீசன் விரைவில் தொடங்கவுள்ளதை ஊட்டி தாவரவியல் பூங்காவில் 2.5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் செப்டம்பர் மாதம் தொடங்கி அக்டோபர் வரை இரண்டாவது சீசனுக்கு உரிய காலமாகும். இந்நிலையில் இன்னும் ஓரிரு நாட்களில் இரண்டாவது சீசன் தொடங்கவுள்ளது.. இதையொட்டி ஊட்டி தாவரவியல் பூங்காவின் பல்வேறு இடங்களில் மேரிகோல்டு, பிரெஞ்ச் மேரிகோல்டு, ஆஸ்டர், வெர்பினா, லூபினா, கேன்டிப்ட், பெட்டூனியா உள்ளிட்ட 70 வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் தற்போது பூத்துக் குலுங்குகின்றன. இதேபோல் குன்னூர் சிம்ஸ் பூங்கா, காட்டேரி பூங்கா, கோத்தகிரி நேரு பூங்கா ஆகியவற்றில் நடவு செய்யப்பட்ட செடிகளில் பூக்கள் பூத்துக் குலுங்கத் தொடங்கியுள்ளன.

விநாயகர் சதுர்த்தி, ஓணம் பண்டிகை விடுமுறை நாட்களில் ஏராளமானோர் வருகை தர வாய்ப்புள்ளதாக சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த ஆண்டு இரண்டாவது சீசனில் சுமார் 3 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை புரிவார்கள் என்று தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்தனர்.

**பழனியில் கோடையிலும் நெல் சாகுபடி தீவிரம்**

பழனியை அடுத்த பாலாறு, வரதமாநதி அணை பாசன பகுதிகளில் கோடையிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு பகுதியிலும் தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் திண்டுக்கல் மாவட்டம் பழனி பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் பழனியைச் சுற்றியுள்ள அணைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இந்நிலையில் கடந்த சிலதினங்களுக்கு முன் வரதமாநதி, பாலாறு மற்றும் குதிரையாறு அணைகள் கோடைகால பாசனத்துக்காக திறக்கப்பட்டன. தண்ணீரின் இருப்பைப் பொருத்து நீரின் திறப்பு அளவு மாறுபடும் என பொதுப்பணித் துறையினரால் அறிவிக்கப்பட்ட நிலையில், அணைகளின் பாசனப் பகுதிகளில் நெல் பயிர் சாகுபடிப் பணிகள் தொடங்கின. தற்போது ஒரு மாதத்துக்கு மேலான நிலையில் பல இடங்களிலும் நெற்பயிர் கதிர்பிடிக்க ஆரம்பித்துள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் பல இடங்களிலும் நெல்அறுவடை பணிகள் துவங்கி விடும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர். இந்நிலையில் நெல்லுக்கு போதிய விலை இல்லாத நிலை நீடித்து வருகிறது. விவசாயிகளின் அவசரத் தேவையை அறிந்த வியாபாரிகள் நெல்லை குறைந்த விலைக்கே கொள்முதல் செய்கின்றனர். பழனியின் வடக்குப் பகுதிகளில் நெல்பயிரிட்டு தண்ணீர் பற்றாக்குறையால் அவற்றை ஆடுகள் மேய்ந்து வரும் நிலையில் வியாபாரிகள் நெல் விலையைக் குறைத்துள்ளது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இதனால், இப்பகுதியில் அரசின் நெல்கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனவே, மாவட்ட நிர்வாகம் இந்த முறை பழனியை அடுத்த பாலசமுத்திரம், ஆயக்குடி பகுதிகளில் நெல்கொள்முதல் மையம் அமைப்பது அவசியமாகும்.

## தேனி மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் 13,481 விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி

தேனி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் 13,481 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.96 கோடியே 50 லட்சம் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் கூறியதாவது: மாவட்டத்தில் 80 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 13,481 சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.96 கோடியே 50 லட்சம் விவசாய பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கம்பம் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் உறுப்பினர்களாக உள்ள 4 விவசாயிகளுக்கு ரூ.27 லட்சம் நீண்ட கால விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கடன் தள்ளுபடி பயனாளிகள் பட்டியல் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளின் தகவல் பலகையில் வெளியிடப்பட்டுள்ளது. கடன் தள்ளுபடி பட்டியலில் விடுதல், திருத்தம் ஆகிய விவரங்கள் குறித்து விவசாயிகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு மனு அளிக்கலாம் என்றார்.

## காரைக்குடி பகுதியில் பலத்த மழை

காரைக்குடியில் 2-வது நாளாக சனிக்கிழமை மாலையில் தொடர் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

காரைக்குடி மற்றும் சுற்றுவட்டாரங்களில் வெள்ளிக்கிழமை மாலையில் சுமார் 1 மணிநேரத்திற்கும் மேலாக இடி, மின்னல், காற்றுடன் கூடிய மழைபெய்திருந்தது. இந்நிலையில், சனிக்கிழமை மாலை சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது. அப்போது தொடர் இடி, மின்னல் ஏற்பட்டது. இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பின்னர் இரவு 8 மணியளவில் மீண்டும் மின்சாரம் சீரானது. தொடர்ந்து பெய்த மழையால் நகரில் குளிர்ச்சி நிலவி வருகிறது.

**"தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைத்திட 100% மானியம்'**

தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைத்திட சிறு,குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நிலத்தடி நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து கொண்டே வரும் இத்தருணத்தில், இருக்கும் நீர் ஆதாரத்தை பாசனத்துக்காக திறம்படப் பயன்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். பாசன நீர் வீணாகாமல், சீராகப் பயிர்களுக்குக் கிடைக்கச் செய்து, பயிரின் சீரான வளர்ச்சியால் உற்பத்தித் திறனை அதிகரித்து, அதிக மகசூல் பெறச் செய்வதால் விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும்.

சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் செய்வதால் சாதாரண முறையில் 1 ஏக்கருக்கு பாசனம் செய்யும் நீரைக் கொண்டு 3 ஏக்கருக்குப் பாசனம் செய்யலாம். தோட்டக்கலைப் பயிர்களாகிய பழப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், மலர் வகைகள், மருத்துவப் பயிர்கள் போன்றவற்றுக்கு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலமாக சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத்துக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஐந்து ஏக்கருக்கு மற்றும் அதற்குக் குறைவாக வைத்துள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

இதில், 2016-17-ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்டத்தில் 548.67 ஹெக்டேர் பரப்பளவிலான தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர்ப் பாசனம் அமைக்க ரூ. 3 கோடியே 78 லட்சத்து 7 ஆயிரம் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில், சிறு - குறு விவசாயிகளுக்கு 351.14 ஹெட்டேருக்கு ரூ. 2 கோடியே 41 லட்சத்து 96 ஆயிரமும், இதர விவசாயிகளுக்கு 87.79 ஹெக்டேருக்கு ரூ. 60 லட்சத்து 49 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஹெக்டேருக்கு மானியம் வழங்கப்படும். தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர்ப் பாசனத்துக்கு மானியம் பெற விரும்பும் விவசாயிகள், கிராம நிர்வாக அலுவலர் சான்று, கணினி சிட்டா, அடங்கல், நில வரைபடம், கிராம வரைபடம், மண் மாதிரி மற்றும் பாசன நீர் மாதிரி ஆய்வு அறிக்கை, குடும்ப அட்டை நகல், புகைப்படம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் முன்பதிவு செய்து பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 1.25 கோடிக்கு கொப்பரை ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 1 கோடியே 25 லட்சத்துக்கு கொப்பரை மற்றும் தேங்காய் ஏலம் நடைபெற்றது.

அவல்பூந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 4 ஆயிரத்து 486 மூட்டைகளில் 2 லட்சத்து 23 ஆயிரத்து 195 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 58.35-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 56.20-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 57.85-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 46.15-க்கும் என மொத்தம் ரூ. 1 கோடியே 24 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

அதேபோல, 12 ஆயிரத்து 510 கிலோ எடையுள்ள 29 ஆயிரத்து 337 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிக விலையாக டன் ரூ. 16 ஆயிரத்து 700, குறைந்த விலை டன் ரூ. 13 ஆயிரத்து 660 என ரூ. 1 லட்சத்து 90 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. தேங்காய் ஒன்றுக்கு ரூ. 6.50 முதல் ரூ. 9.50 வரை ஏலம் நடைபெற்றது.

## விதைப் பண்ணை பதிவுகள் ஆய்வு

தருமபுரி மாவட்டத்தில் நிகழாண்டிற்கான விதைப்பண்ணை பதிவுகளை சனிக்கிழமை கோவை விதைச்சான்று இணை இயக்குநர் எஸ்.சபாநடேசன் ஆய்வு செய்தார்.

தருமபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விதைப் பண்ணை பதிவு, தற்போது அவைகளின் வளர்ச்சி நிலைகள், வரும் பருவத்திற்கான செயல்திட்டங்கள், விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், விதை தரத்தினை உறுதி செய்யும் விதைப் பரிசோதனை நிலையத்தையும் அங்கு நடைபெறும் பணிகளையும் எஸ்.சபாநடேசன் ஆய்வு செய்தார்.

இதையடுத்து வேளாண் அதிகாரிகளுடன் நிகழாண்டு விதைப் பண்ணை பதிவு மற்றும் தரமான விதை உற்பத்தி செய்வது குறித்து கலந்தாலோசித்தார். வேளாண்மை துணை இயக்குநர் வெங்கடேசன், விதைச்சான்று உதவி இயக்குநர் கணேசன், விதைப் பரிசோதனை அலுவலர் கமலா மற்றும் விதைச் சான்று அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பரமத்தி வேலூர் பகுதியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்தி வேலூர் வட்டம், ஜேடர்பாளையம் படுகையணையில் இருந்து ராஜா வாய்க்காலில் காய்ந்து போகும் பயிர்களைக் காக்க தண்ணீர் திறக்க விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை மாலை இடியுடன் கூடிய கன மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டம், ஜேடர்பாளையம் படுகையணையில் இருந்து பிரித்துக் கொடுக்கப்படும் தண்ணீர் ராஜா வாய்க்காலில் திறக்கப்படுகிறது. பின்னர், நன்செய் இடையாறில் இருந்து கொமராபாளையம், பொய்யேரி, மோகனூர் ஆகிய வாய்க்கால்கள் பிரிக்கப்பட்டு, மோகனூர் அருகே உள்ள ஒருவந்தூர் வரை செல்கிறது. இந்த வாய்க்கால் பாசனம் மூலம் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நன்செய் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. தற்போது மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் பயன்பாட்டுக்கு மட்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்ட

நிலையில், ராஜா வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் வாழை, வெற்றிலை, கரும்பு, கோரை, நெல் உள்ளிட்ட பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வருடப் பயிர்களைக் காக்க ராஜா வாய்க்காலில் கலக்கும் சாக்கடை கழிவுநீரை விளை நிலங்களுக்கு பாய்ச்சும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து ராஜா வாய்க்கால் பாசன விவசாயிகள் மற்றும் தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்கத்தினர் உள்ளிட்டோர் வாடும் பயிர்களைக் காக்க ராஜா வாய்க்காலில் உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும் எனவும், இல்லையென்றால் அடுத்தகட்ட போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை மாலை திடீர் என பெய்த கன மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 71.13 அடியாக உயர்வு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 71.13 அடியாக உயர்ந்துள்ளது. காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை 7,060 கன அடியாகக் குறைந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 1,250 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 71.13 அடியாக இருந்தது. அணையின் நீர்இருப்பு 33.67 டி.எம்.சி.யாக உள்ளது.

## சேலம் மாவட்டத்தில் 354 மி.மீ. மழை

சேலம் மாவட்டத்தில் 354 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

வங்கக்கடலில் வளிமண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகி உள்ளது. இதையடுத்து, தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது. அவ்வப்போது இரவு நேரங்களில் மழையும் பெய்து வருகிறது.

வியாழக்கிழமை இரவு பலத்த மழை பெய்த நிலையில், வெள்ளிக்கிழமை இரவும் மழை பெய்தது.

சேலம் மாவட்டத்தில் சனிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்):

கெங்கவல்லி-49, சேலம் – 42, வாழப்பாடி-38, ஆனைமடுவு, தம்மம்பட்டி-32, ஏற்காடு-27, வீரகனூர்-26, ஓமலூர் -25, காடையம்பட்டி, கரியகோவில் – 23, ஆத்தூர் – 17, பெத்தநாயக்கன்பாளையம் -16, எடப்பாடி – 7, சங்ககிரி – 4 மில்லி மீட்டர் என மாவட்டத்தில் 354 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்துள்ளது.

தம்மம்பட்டியில்.. தம்மம்பட்டி பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை பெய்தது.

தம்மம்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்த மழையால் விவசாய நிலங்களில் மழை நீர் தேங்கியுள்ளது. இந்த மழை நீர், ஓரிரு வாரங்களுக்கு போதுமானதாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். இந்த மழையால் 40-க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சூளைகளில் மழை நீர் தேங்கியதால் செங்கல்கள் வீணாகிவிட்டன.

இன்னும் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என்று கூறப்படுவதால் பெரும்பாலான சூளைகளில் செங்கல்கள் தார்ப்பாய்களால் மூடப்பட்டுள்ளன.

## தஞ்சாவூரில் நாளை நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த 2 நாள் பயிற்சி முகாம் செவ்வாய், புதன்கிழமைகளில் (ஆக. 30, 31) நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டு வரவேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 90471 57859, 04362-204009 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## நாகப்பட்டினத்தில் மழை

நாகப்பட்டினத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை மழை பெய்தது.

நாகப்பட்டினத்தில் கடந்த சில நாள்களாக வெயில் கடுமையாக இருந்தது. இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் மழை பெய்தது. 1 மணி நேரம் பெய்த மழையில் பள்ளமான இடங்களில் சிறிது நேரம் தண்ணீர் தேங்கியது. ஞாயிற்றுக்கிழமை என்பதால் பெரும்பாலான மக்கள் வீடுகளிலேயே இருந்தனர்.

வேளாங்கண்ணி பேராலய ஆண்டுப் பெருவிழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். மழையின் காரணமாக அவர்கள் அருகிலிருந்த கடைகள், வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

## சம்பா சாகுபடி தொகுப்புத் திட்டத்தில் திருவாரூர் மாவட்டத்துக்கு ரூ.25 கோடி: அமைச்சர் ஆர்.காமராஜ் தகவல்

சம்பா சாகுபடி தொகுப்புத் திட்டத்தில் திருவாரூர் மாவட்டத்துக்கு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக உணவுத்துறை அமைச்சர் ஆர்.காமராஜ் தெரிவித்தார்.

திருவாரூர் ஆட்சியர் அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற சம்பா சாகுபடி தொகுப்புத் திட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டத்தில் மேலும் அவர் பேசியது: இந்திய வேளாண் பயிர்க் காப்பீடு நிறுவனத்தில் 2-ஆம் பருவத்துக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி விவசாயி ஒரு ஏக்கருக்கு ரூ.263 செலுத்தினால் போதும் மீதமுள்ள பிரீமியத் தொகையை அரசு ஏற்கும். இதில் 100 சதவீத பயிர்கள் பாதிப்பானது மூன்று கட்டங்களில் எந்த கட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் ரூ. 12,000 ஆக இருந்ததை ரூ. 17,500 வரை உயர்த்தி வழங்க முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார். டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் மண் வளத்தைப் பெருக்க ரூ.64.30 கோடி நிதி ஒதுக்கி சம்பா தொகுப்புத் திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்வதற்காக தரிசு உழவுப்பணிக்கு ஏக்கருக்கு ரூ.500 மானியம் வழங்கப்படுமெனவும், இதற்கு ரூ. 25 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்படும் என்றும், விவசாயிகள் தரமான சான்று பெற்ற

விதைகளை உபயோகித்து சம்பா சாகுபடியை மேற்கொள்ள கிலோவுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படும்.

இதற்கு ரூ.4.50 லட்சம், இயந்திர முறை நெல் விதைப்புக்கு ஏக்கருக்கு ரூ.600 மானியம் வழங்க ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்துக்கு மட்டும் சம்பா தொகுப்புத் திட்டத்துக்கு ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் காமராஜ்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் இல.நிர்மல்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் த.மோகன்ராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

ஆய்வுக் கூட்டம்... பின்னர் நடைபெற்ற அனைத்துத் துறை உயர் அலுவலர்களுக் கான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அமைச்சர், முதல்வர் ஜெயலலிதா அறிவிக்கும் நலத்திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு முழுமையாக சென்றடைய வேண்டும். மக்களுக்கான சேவையை இறைவனுக்கு செய்யும் சேவையாக கருதி அலுவலர்கள் பணியாற்ற வேண்டும்.

பல்வேறு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் தகுதியுடைய பயனாளிகளுக்கு தங்கு தடையின்றி விரைவாக கிடைக்கும் வகையில் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்றார்.

## "திருவாரூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 1000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்'

திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 76 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக தமிழக உணவு, நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆர்.காமராஜ் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

மன்னார்குடி அருகே பாமணியில் மத்திய அரசுக்கு சொந்தமான 10 சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. இதில் 50 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்கு இருப்பு வைக்கலாம். இதை தமிழக அரசு வாடகைக்கு எடுத்து அதில் பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி மூட்டைகளை இருப்பு வைத்துள்ளது.

இந்த சேமிப்புக் கிடங்கை வெள்ளிக்கிழமை மாலை திடீர் ஆய்வு செய்த பின் அமைச்சர் ஆர்.காமராஜ் கூறியது: விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு மின்னணு நெல் கொள்முதல் திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து குறைகள், புகார்கள் பெறப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கொள்முதலுக்கான தொகையினையும் உடனடியாக வழங்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசி தரமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக தரமான நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதை பின்பற்றாத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நடப்பு கொள்முதல் பருவத்தில் சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.70-ம், பொது ரக நெல்லுக்கு ரூ.50-ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் 434 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 5 லட்சத்து 18 ஆயிரம் மெட்ரிக் டன் நெல்லுக்கு ரூ.31 கோடியே 45 லட்சம் ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நெல் அறுவடை காலங்களில் தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க மாவட்ட ஆட்சியருக்கும், முதுநிலை மண்டல மேலாளரும் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்றார் அமைச்சர்.

அமைச்சருடன் ஆய்வின்போது, தஞ்சை தொகுதி எம்பி கு.பரசுராமன், நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் கா.பாலச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் எல்.நிர்மல்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

நீடாமங்கலத்தில் ஆய்வு...

நீடாமங்கலம் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம், பெரம்பூர் அரசு நேரடி நெல்கொள்முதல் நிலையம், தேவங்குடி அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஆகியவற்றில் தமிழக உணவு அமைச்சர் ஆர்.காமராஜ் வெள்ளிக்கிழமை ஆய்வுசெய்தார்.

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு ஏதேனும் இடையூறு உள்ளதா, விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்தார்.

**பால் உற்பத்தியைப் பெருக்க இலவச கால்நடை பரிசோதனை முகாம்கள்: அமைச்சர் சி.வி.சண்முகம்**

வேலியம்பாக்கத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் மருத்துவ பரிசோதனை முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

ஆட்சியர் எம்.லட்சுமி தலைமை வகித்தார். மாநில சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் தொடங்கி வைத்துப் பேசியதாவது: தமிழக முதல்வர் கடந்த 2011-இல் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கினார்.

இத்திட்டத்தில் இந்தாண்டு வரை, வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற தலா 4 ஆடுகள் வீதம், 31 மாவட்டங்களில் 7 லட்சம் பேருக்கும், 21 மாவட்டங்களில் 60 ஆயிரம் பேருக்கு தலா ஒரு கறவை பசு வீதம் 60,000 பசுக்களும் வழங்கப்பட்டுள்ளன.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 117 கிராமங்களில் 5,868 பேருக்கு கறவை பசுக்களும், 1,098 கிராமங்களில் 50,118 பேருக்கு வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் வழங்கப்பட்ட பசுக்களின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும்,

ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும் மாநிலம் முழுவதும் மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி நடைபெற்ற முகாமில் பசுக்கள் சினை பரிசோதனை, பருவம் வராத பசுக்களுக்கு தாது உப்புக்கலவை வழங்குதல், ஹார்மோன் சிகிச்சை அளித்தல், பசுக்களின் கர்ப்ப குறைபாடுகளைக் கண்டறிந்து கருவூட்டல் செய்தல், கன்றுகளை பரிசோதித்து குடற்புழு நீக்கம் செய்தல், அதேபோல் ஆடுகளுக்கும் குடற்புழு நீக்கம் செய்தல், ஸ்கேன் செய்து பார்த்து சிகிச்சையளித்தல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, இந்த இலவசக் கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடைபெறும் என்றார்.

கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் மாதேஷ்வரன், உதவி இயக்குநர்கள் சாந்தி, குருவையா, மகேந்திரன், சிவகுமார், ஒன்றியக் குழுத்

தலைவர் விஜயா சுரேஷ்பாபு, துணைத் தலைவர் வளர்மதி மணிமாறன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நீலகிரி விவசாயிகளுக்கு மானியத்துடன் திட்டங்கள் உடனடியாக பெற்று பயன்பெற அழைப்பு

ஊட்டி: நீலகிரி விவசாயிகள் பயன்பெறும் வகையில், பல்வேறு திட்டங்கள் மானியத்துடன் அறிவிக்கப்பட்டுள்ளன.
மாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தோட்டக்கலை பயிர்களில், வீரிய ஒட்டுரக காய்கறிகள் கேரட், பூண்டு, மிளகு, கொய்மலர்கள் மற்றும் ஆரஞ்சு ஆகியவற்றில் புதிய தோட்டங்கள் அமைப்பதற்கு, 2 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில், 1,495 எக்டர் பரப்புக்கு, 40 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

பசுமைக்குடில், நிழல் வலைக்குடில்கள் போன்ற உயர் தொழிற்நுட்ப சாகுபடி முறைகளை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்திற்கு, 68 லட்சம் ரூபாய் செலவில் பசுமைக்

குடில்கள் மற்றும் நிழல் வலைக்குடில்கள், 16 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பில், 50 சதவீத மானியத்தில்
செயல்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பண்ணை இயந்திரங்களான மினி டிராக்டர், பவர் டில்லர்கள் மற்றும் தெளிப்பான்கள், 25 முதல், 50 சதவீதம் வரை, மானியம் அனுமதிக்கப்பட்டு, மாவட்டத்திற்கு, 25.50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, அறுவடைக்கு பிந்தைய மேலாண்மைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள, 50 சதவீத மானியத்தில் சிப்பம் கட்டும் அறை, குளிர்பதன அறை, ஒருங்கிணைந்த குளிர் சாதன வசதி போன்றவை செயல்படுத்தப்பட உள்ளன. மேலும், தோட்டக்கலை பயிர்களுக்கான சந்தை உள்கட்டமைப்பு வசதிகள்

மேம்படுத்த, மானியத்துடன் கூடிய ஊரக சந்தை, சில்லரை விற்பனை நிலையம் மற்றும் நடமாடும் விற்பனை நிலையம் அமைக்க, விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தி குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இதற்காக, 24.25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் சிறப்பு திட்டமாக, பண்ணை சாகுபடிக்கு தேவையான பொருட்கள், 50 சதவீதம் மானியத்தில், 1,600 விவசாயிகளுக்கு, 32 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளில், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க, 15.55 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், தேனீ வளர்ப்புக்கு, 40 சதவீத மானியமும், மண்புழு உர உற்பத்தி மற்றும் மண்புழு உர படுகை அமைப்பதற்கு, 50 சதவீத மானியமும் வழங்கப்படும். இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி பயன்பெறவேண்டும். இது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்த, இம்மாவட்டத்துக்கு, 7 கோடி ரூபாய் ஒதுக்கப் படுள்ளது.

மேலும் விபரங்கள் பெற, வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்களை, விவசாயிகள் அணுகலாம்.

மேலும், தொலைபேசியில் தொடர்புக் கொள்வோர், ஊட்டி தோட்டக்கலை உதவி இயக்குனர் (0423- 24438670, 94866 39058), குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் (0423 -2231718, 94866 39058), கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் (04266 -273709, 89030 09036), ஊட்டி மத்திய திட்டம், தோட்டக்கலை துணை இயக்குனர் (0423 -2443926, 94436 04050), ஊட்டி மாநில திட்டம், தோட்டக்கலை துணை இயக்குனர் (0423 -2443842, 94436 05101) மற்றும் ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குனர் (0423-2444085, 94432 80740) ஆகிய, எண்களில் தொடர்புக் கொள்ளலாம். இவ்வாறு, கலெக்டர் சங்கர் கூறியுள்ளார்.

## சிறுதானியங்களில் மதிப்பு கூட்டு பயிற்சி

காரைக்குடி: சாக்கோட்டை வட்டார வேளாண்மை மையம், செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையம் சார்பில், சிறுதானியங்களில் மதிப்பு கூடுதல் பயிற்சி செட்டிநாடு மானாவாரி வேளாண் நிலையத்தில் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் சாந்தி வரவேற்றார். செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலைய தலைவர் மெர்டில் கிரேஸ் முன்னிலை வகித்தார். சாக்கோட்டை ஒன்றிய தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர்கள் அமகப்பன், மணிவண்ணன் பேசினர். வேளாண் அலுவலர் பிரியா பொன் காயத்ரி நன்றி கூறினார்.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## இனி பற்றாக்குறை ஏற்படாது பருப்பு உற்பத்தி செய்ய பிரேசிலுடன் பேச்சு



பாட்னா: பிரேசிலில் இருந்து பருப்பு உற்பத்தி செய்வது குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாக ராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்தார். கடந்த ஆண்டில் பருப்பு

விலை வரலாறு காணாத உச்சத்தை எட்டியது. இதையடுத்து நாடு முழுவதும் பதுக்கல்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பருப்பு பறிமுதல் செய்யப்பட்டது. இவை அந்தந்த மாநில தேவைக்கேற்ப மத்திய அரசு மூலம் .சப்ளை செய்யப்பட்டது. அதோடு, பருப்புக்கு குறைந்தபட்ச ஆதார விலை ஒரு குவிண்டாலுக்கு 275ல் இருந்து 425ஆக உயர்த்தப்பட்டது. உள்நாட்டில் பருப்பு உற்பத்தி சரிவடைந்ததே இதற்கு முக்கிய காரணம். தற்போது விவசாயிகள் பலர் பருப்பு சாகுபடிக்கு மாறி வருவதால் இனி தட்டுப்பாடு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில், வெளிநாடுகளில் நிலத்தை குத்தகைக்கு எடுத்து பருப்பு உற்பத்தி செய்ய மத்திய அரசு முடிவு செய்தது.

இதுகுறித்து மத்திய அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் கூறியதாவது: இந்தியாவை விட பிரேசிலில் நில பரப்பளவு அதிகம். எனவே அங்கு நிலத்தை குத்தகைக்கு எடுத்து பருப்பு உற்பத்தி செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

ஒப்பந்தம் கையெழுத்தாகும்பட்சத்தில், இனி அடுத்த ஆண்டு முதல் இந்தியாவில் பருப்பு பற்றாக்குறை ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்காது. இதற்காக பிரேசிலுடன் பல கட்டமாக பேச்சுவார்த்தை நடந்துள்ளது. அந்நாட்டு விவசாய அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தியுள்ளேன்.

இந்தியாவை விட இரண்டரை மடங்கு அதிக நிலப்பரப்பளவு உள்ளது. ஆனால் இதில் 6 சதவீத நிலத்தில்தான் பருப்பு சாகுபடி செய்யப்படுகிறது. பிரேசிலில் பருப்பு உற்பத்திக்கான விதைகளை இந்தியா அனுப்பி உதவி செய்யும். இந்தாண்டு அக்டோபரில் பிரேசில் குடியரசு தலைவர் இந்தியா வருகிறார். அப்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருப்பு உற்பத்தியை அதிகரித்து உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய மத்திய அரசு பல கட்ட முயற்சிகளை எடுத்து வருகிறது. இவ்வாறு ராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்தார்.

## உளுந்தூர்பேட்டை பகுதியில் கம்பு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

உளுந்தூர்பேட்டை: விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் அதிக அளவு விவசாயம் பயிரிடும் பணி நடைபெற்று வருகிறது. கோடை காலம் மற்றும் மழை காலத்திற்கும் ஏற்ற வகையிலும், ஆடி பட்டத்திலும் பயிரிட வேண்டிய பயிரை விவசாயிகள் முறையாக பயிரிட்டு வருகின்றனர். கடந்த ஆடி பட்டத்தில் 3 மாதகால பயிரான கம்பு பயிரை மானாவாரியாக விவசாயிகள் பயிரிட்டனர். இந்நிலையில் கடந்த இரண்டு மாத காலமாக மாலை மற்றும் இரவு நேரங்களில் அவ்வப்போது போதிய அளவு மழை பெய்து வந்ததால் கம்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது கம்பு அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில் கம்பு அதிக அளவு மகசூல் கிடைத்துள்ளதால் இந்த போகத்தில் கம்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதிக அளவு கம்பு அறுவடை செய்யும் நேரங்களில் மார்க்கெட் கமிட்டியில் குறைந்த அளவில் கம்பு விலை போவதை தடுக்க அரசு உரிய விலை நிர்ணயம் செய்து நியாயமான விலையில் கம்பு கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

## ஆத்தூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 400 மூட்டை மஞ்சள் ரூ.18 லட்சத்துக்கு ஏலம்

ஆத்தூர் : சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. ஆத்தூர், பெரம்பலூர், வாழப்பாடி, சின்னசேலம், விழுப்புரம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் அறுவடை செய்த மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், சேலம், ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று மஞ்சளை தேர்வு செய்து வாங்கிச் சென்றனர். 400 மூட்டை மஞ்சள் ரூ.18 லட்சத்துக்கு ஏலம் போனது. விரலி ரகம் குவிண்டால் ரூ.6,009 முதல் ரூ.9,500 வரையும், உருண்டை ரக மஞ்சள் ரூ. 4 ஆயிரம் முதல் ரூ.8,400 வரையும் விலை போனது. கடந்த வாரத்தை விட, இந்த வாரம் விரலி மஞ்சளின் விலை குவிண்டாலுக்கு ரூ.300 வரை குறைவாக விற்பனையானது. இதனால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

## விவசாயிகளுக்கான வேளாண் பயிற்சி 2 நாட்கள் நடக்கிறது

நாமக்கல் : நாமகிரிப்பேட்டையில், விவசாயிகளுக்கான அடிப்படை பயிற்சி 2 நாட்கள் நடக்கிறது நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இன்று (29ம் தேதி) மற்றும் நாளை (30ம் தேதி) ஆகிய இரண்டு நாட்கள் விவசாயிகளுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள் நடக்கிறது. இதில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகம், விதைச் சான்றுத்துறை, மண்ஆய்வுக்கூடம், பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளிக்கின்றனர். விருப்பம் உள்ள விவசாயிகள், நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளும் படி, நாமக்கல் உழவர்பயிற்சி நிலைய துணை இயக்குனர் சுப்பையா கேட்டுக்கொண்டுள்ளார்.

## பாப்பாரப்பட்டியில் விவசாயிகளுக்கு பயறு வகை பயிற்சி

தர்மபுரி: பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயறு வகையில் மேம்படுத்தப்பட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில், பயறு வகை பயிர்களில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி மற்றும் விதைகளில் நுண்ணுயிர் முலாம் பூசுதல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி பாப்பாரப்பட்டியில் நடந்தது. இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகம், பயறு வகை பயிர்களை தாக்கும் முக்கியமான பூச்சி மற்றும் நோய்களை பற்றியும், ஒருங்கிணைந்த மேலாண்மையில் அவற்றை கட்டுப்படுத்துவது பற்றியும் விளக்கினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறை உதவி பேராசிரியர் செந்தில், பயறு வகை பயிர்களின் விதைகளில் நுண்ணுயிர் முலாம் பூசுவதன் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி விளக்கினார். உதவி பேராசிரியர் வெண்ணிலா, அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். இப்பயிற்சியில் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த 40 விவசாயிகள் பங்கேற்றனர்.

## மாவட்டத்தில் 16 பஞ்சாயத்துக்களில் நெல் சாகுபடி பணியில் விவசாயிகள் மும்முரம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அணையில் இருந்து முதல்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் நெல் சாகுபடி பணியில் விவசாயிகள் மும்முரம் ஈடுபட்டுள்ளனர். கிருஷ்ணகிரி அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதையடுத்து கடந்த 17ம் தேதி மாவட்ட கலெக்டர் கதிரவன் முதல்போக நெல் சாகுபடிக்கு தண்ணீரை திறந்து வைத்தார். கிருஷ்ணகிரி அணையின் மொத்த உயரமான 52 அடியில் அப்போது 51.15 அடி தண்ணீர் இருந்தது.

அணையின் இடது மற்றும் வலது புற பிரதான கால்வாய்களில் முதல்போக பாசனத்திற்காக திறந்துவிடப்பட்டுள்ள இந்த தண்ணீரால் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சௌட்டஅள்ளி, தளிஅள்ளி, கால்வேஅள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஅள்ளி, எர்ரஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், பாலேகுளி, மாரிசெட்டிஅள்ளி, நாகோஜனஅள்ளி, ஜனப்பரஅள்ளி, பையூர் ஆகிய 16 பஞ்சாயத்துகளில் உள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த 9,012 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

இந்த தண்ணீர் வருகிற 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் தேதி வரை என 150 நாட்களுக்கு திறந்துவிடப்படும். அணையில் தற்போது உள்ள நீரின் அளவினை கொண்டும், எதிர்வரும் பருவ மழையினால் வரும் நீர் வரத்தினை எதிர்நோக்கியும் இடதுபுற கால்வாய் மூலம் வினாடிக்கு 80 கனஅடி தண்ணீரும், வலதுபுற கால்வாய் மூலம் 75 கனஅடி தண்ணீரும் என மொத்தம் 150 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையில் தண்ணீர் திறக்கப்படும் என முன்கூட்டியே அறிந்த விவசாயிகள், ஏற்கனவே நெல் நடவு செய்ய நாற்று விட்டிருந்தனர். அத்துடன் தங்களது வயல்களை உழவு செய்து தயார் நிலையில் வைத்திருந்தனர்.

இதையடுத்து தற்போது பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால்

நெற்பயிர் நடவு செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தால் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஆட்கள் பற்றாகுறையை போக்கிட கூட்டு நடவு திட்டத்தை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். அதன்படி, தொழிலாளர்கள் கூட்டாக இணைந்து, இன்று ஒருவரின் நிலத்தில் நடவு, நாளை மற்றொருவரின் நிலத்தில் நடவு என வரிசை படுத்தி நெல் நடவு பணிகளை செய்து வருகின்றனர்.

## பண்ணையாளர்களுக்கு மீன் வளர்ப்பு பயிற்சி முகாம்

போச்சம்பள்ளி: கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த மீன் பண்ணையாளர்களுக்கு, திலோப்பியா மீன் வளர்ப்பு குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நாளை (30ம் தேதி) நடைபெறவுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி தாலுகா, புங்கம்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ், திலேப்பியா மீன் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் மீன் வளர்ப்பை அதிகரிக்கும் நோக்குடன், திலேப்பியா மீன் வளர்ப்பு தொழில் நுட்பத்தினை அறிமுகபடுத்தும் விதமாக கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த மீன் பண்ணையாளர்களுக்கு திலேப்பியா மீன் வளர்ப்பு குறித்து, ஒருநாள் இலவச பயிற்சி நாளை (30ம் தேதி) நடக்கிறது.

இந்த பயிற்சி முகாம் காலை 10 மணி முதல், மாலை 5 மணி வரை நடைபெறும். பயிற்சியில் திலேப்பியா உயிரியல், இடத்தேர்வு, பண்ணையின் கட்டமைப்பு, குளம் தயார் செய்தல், மீன் வளர்ப்புக்கான நீர்த்தர மேலாண்மை, உணவு வழங்குதல், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பொருளாதாரம் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படும். எனவே, விருப்பம் உள்ளவர்கள், தங்கள் பெயர்களை 04341 254321 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என, திலோப்பியா மீன் ஆராய்ச்சி மைய தலைவர் சிதம்பரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கெலமங்கலம் கூட்டுறவு சங்கத்தில் எள் ஏலம் தொடக்கம் ரூ.12 லட்சத்துக்கு வர்த்தகம்

தேன்கனிக்கோட்டை : கெலமங்கலம் வேளாண் கூட்டுறவு சங்கத்தில், நடப்பாண்டு எள் ஏலம் நேற்று தொடங்கியது. முதல் வாரத்தில் 200 மூட்டை எள் ரூ.12 லட்சத்துக்கு விற்பனையானது. கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தில், ஆண்டுதோறும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் 5 வாரங்களுக்கு ஞாயிற்று கிழமை தோறும் எள் ஏலம் நடைபெறுவது வழக்கம். நடப்பாண்டு தேன்கனிக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகள் எள் பயிரிட்டிருந்தனர்.

இந்த எள் அறுவடை தற்போது தொடங்கியுள்ளது. இதையடுத்து கெலமங்கலம் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்தில் நேற்று எள் ஏலம் நடைபெற்றது. சங்க தலைவர் சையத் அசேன் தலைமை வகித்தார். செயலாளர் வேலு முன்னிலை வகித்தார். தேன்கனிக்கோட்டை, தளி, கெலமங்கலம் சுற்றுவட்டார விவசாயிகள், தாங்கள் விளைவித்த 200 மூட்டை எள்ளை ஏலத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

ஒசூர், தேன்கனிக்கோட்டை, தர்மபுரி, கோயமுத்தூர், சேலம் ஆகிய பகுதியிலிருந்து வந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். தரம் வாரியாக ஒரு கிலோ எள் □60 முதல் □85 வரை ஏலம் போனது. ஒட்டுமொத்தமாக 200 மூட்டை எள் ஏலத்தில் □12 லட்சத்துக்கு விற்பனையானது. தொடர்ந்து 5 முதல் 6 வாரங்கள் வரை நடைபெறும் எள் ஏலத்திற்கு விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த எள்ளை கொண்டு வந்து நல்ல விலை பெறும்படி அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## பண்ணையாளர்களுக்கு திலோப்பியா மீன் வளர்ப்பு பயிற்சி

போச்சம்பள்ளி : கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த மீன் பண்ணையாளர்களுக்கு, திலோப்பியா மீன் வளர்ப்பு குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நாளை (30ம் தேதி) நடைபெறவுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி தாலுகா, புங்கம்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு மீன்வளப்

பல்கலைக்கழகத்தின் கீழ், திலேப்பியா மீன் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் மீன் வளர்ப்பை அதிகரிக்கும் நோக்குடன், திலேப்பியா மீன் வளர்ப்பு தொழில் நுட்பத்தினை அறிமுகபடுத்தும் விதமாக கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த மீன் பண்ணையாளர்களுக்கு திலேப்பியா மீன் வளர்ப்பு குறித்து, ஒருநாள் இலவச பயிற்சி நாளை (30ம் தேதி) நடக்கிறது.

இந்த பயிற்சி முகாம் காலை 10 மணி முதல், மாலை 5 மணி வரை நடைபெறும். பயிற்சியில் திலேப்பியா உயிரியல், இடத்தேர்வு, பண்ணையின் கட்டமைப்பு, குளம் தயார் செய்தல், மீன் வளர்ப்புக்கான நீர்த்தர மேலாண்மை, உணவு வழங்குதல், ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பொருளாதாரம் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படும். எனவே, விருப்பம் உள்ளவர்கள், தங்கள் பெயர்களை 04341 254321 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என, திலோப்பியா மீன் ஆராய்ச்சி மைய தலைவர் சிதம்பரம் கேட்டுக் கொண்டுள்ளார்

**விவசாயிகளுக்கு பயறு வகை பயிற்சி**

தர்மபுரி : பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில், பயறு வகை பயிர்களில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி மற்றும் விதைகளில் நுண்ணுயிர் முலாம் பூசுதல் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி பாப்பாரப்பட்டியில் நடந்தது. இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகம், பயறு வகை பயிர்களை தாக்கும் முக்கியமான பூச்சி மற்றும் நோய்களை பற்றியும், ஒருங்கிணைந்த மேலாண்மையில் அவற்றை கட்டுப்படுத்துவது பற்றியும் விளக்கினார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறை உதவி பேராசிரியர் செந்தில், பயறு வகை பயிர்களின் விதைகளில் நுண்ணுயிர் முலாம் பூசுவதன் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி விளக்கினார். உதவி பேராசிரியர் வெண்ணிலா, அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்து

விளக்கினார். இப்பயிற்சியில் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த 40 விவசாயிகள் பங்கேற்றனர்.

**பரம்பிக்குளம் அணையில் இருந்து தூணக்கடவுக்கு மீண்டும் நீர் திறப்பு**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த பரம்பிக்குளம் அணையிலிருந்து, தூணக்கடவு அணைக்கு, வினாடிக்கு 1,100 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.திருப்பூர் மாவட்டம், உடுமலையை அடுத்த திருமூர்த்தி அணையிலிருந்து இரண்டாம் மண்டல பாசன பகுதிக்கு, வரும் செப்டம்பர் 11ம் தேதி தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதையடுத்து, கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு செல்லும் தண்ணீரை சேமித்து வைப்பதற்காக, இந்த மாத துவக்கத்தில், பொள்ளாச்சியை அடுத்த டாப்சிலிப் அருகே உள்ள பரம்பிக்குளம் அணையிலிருந்து, தூணக்கடவு அணைக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அந்த நேரத்தில் வினாடிக்கு 405 கன அடி வீதமே தண்ணீர் திறப்பு இருந்தது. பின்னர், சில நாட்கள் தூணக்கடவிலிருந்து கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந் நிலையில், இரண்டு வாரத்திற்கு முன் திடீரென பரம்பிக்குளம் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக, இரண்டாவது மண்டல பாசனத்துக்கு போதுமான தண்ணீர் திருமூர்த்தி அணையில் தேக்கிவைக்கப்படுமா என்ற வேதனையில் விவசாயிகள் இருந்தனர். இந் நிலையில், திருமூர்த்தி அணைக்காக மீண்டும் பரம்பிக்குளத்திலிருந்து தூணக்கடவு அணைக்கு, நேற்றுமுதல் வினாடிக்கு 1,100 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

மொத்தம் 30 அடி கொண்ட தூணக்கடவு அணையில் தற்போது 18 அடிக்கு தண்ணீர் உள்ளது. இதை தொடர்ந்து இன்று அல்லது நாளை, தூணக்கடவிலிருந்து கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளது.

## கால்நடைகளுக்கு தீவனம் வளர்க்க 75 % மானியம்

கோவை, : தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கோவை ஆனைமலை ஒன்றியம் காளியப்பகவுண்டன்புதூரில், கால்நடை வளர்ப்பிற்கு அரசு மானியத்துடன்கூடிய தீவண பயிர் அபிவிருத்தி திட்டம் அமலில் உள்ளது. இங்கு, விவசாயிகள் பயிரிட்டு வளர்க்கும் தீவன பயிர்களை மாவட்ட கலெக்டர் ஹரிகரன் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது:

தமிழக அரசு சார்பில் கால்நடைகளுக்கு தேவையான தீவண புல் வளர்க்க 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இந்த தீவண புல் வளர்க்க அதிக இடம் தேவையில்லை. விவசாயிகள் தாங்கள் பயிரிடும் விலைநிலங்களின் வரப்பு ஓரம் மற்றும் வாய்கால் ஓரங்களில் ஊடுபயிராக பயிரிட்டு, இவற்றை பராமரித்தாலே போதும். இதன்மூலம் கால்நடைகளுக்கு தேவையான அளவு தீவண புல் கிடைக்கும். அத்துடன், கால்நடைகளின் பால் உற்பத்தி அதிகரிக்கும். மேலும் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கோ-4, கோ-5, தீவண புல், தீவண தட்டைப்பயிறு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தீவண விதைகள், மின்சாரத்தால் இயங்கும் புல் அறுக்கும் கருவி ஆகியவை 60 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. கறவை மாடு வளர்க்கும் விவசாயிகள் இதை பயன்படுத்திக்கொள்ளலாம்.இவ்வாறு கலெக்டர் ஹரிகரன் கூறினார்.

## வரகு பயிரிட்டால் கூடுதல் வருமானம்

மதுரை, :வரகு பயிரிடும் விவசாயிகளுக்கு கோ 3, ஏ.பி.கே 1 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். மரக்கலப்பை கொண்டு 2 முறை நன்கு ஆழமாக உழுது நிலத்தை சமன் செய்ய வேண்டும். அசோஸ்பைரில்லம் 600 கிராம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா 600 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்து பின், விதைப்பு செய்ய வேண்டும். கை விதைப்பு முறைக்கு ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பு செய்தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். வரிசைக்கு வரிசை 22.5 சென்டிமீட்டர் * 10 சென்டிமீட்டர் இடைவெளியும் இருக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி, பின் உழ வேண்டும். தொழு உரத்துடன் 10 பொட்டலங்கள் அசோஸ்பைரில்லம் மற்றும் 10 பொட்டலங்கள் பாஸ்ப்போபாக்டீரியா ஆகிய

நன்மை தரும் உயிர் உரங்களை சேர்மம்து இடலாம். ஹெக்டேருக்கு முறையே 44:22 கிலோ தழை மற்றும் மணிச்சத்துக்களை இட வேண்டும். பயிர் விதைத்த 15ம் நாள் ஒரு முறையும், 40 நாள் ஒரு முறையும் கைக் களை எடுக்க வேண்டும்.

களை எடுத்தவுடன் வரிசைக்கு வரிசை 22.5 சென்டிமீட்டர் மற்றும் செடிக்கு செடி 10 சென்டிமீட்டர் இடைவெளியில் பயிர்களைக் களைக்க வேண்டும். விதையின் மூலம் கதிர்கரிப்பூர்டை நோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மேன்கோசெப் (அ) குளோரோதலோனிலை கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். நோய் எதிர்ப்பு இரகமான கோ 3ஐ பயிரிடலாம். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்து தானியங்களைப் பிரித்தெடுக்க வேண்டும். பிறகு இவற்றை நன்றாக காயவைத்து, சுத்தம் செய்து சேமித்து வைக்க வேண்டும்.